

# சீறத்துன்னபி ﷺ

## நாள் 21

# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: நபி (ஸல்) அவர்களுக்கு அபூலஹப் பாதுகாப்பு அளித்தது
- பகுதி 2: நபி (ஸல்) தாயிஃஃப்பை அடைந்து, தலைவர்களை இஸ்லாத்திற்கு அழைத்தது
- பகுதி 3: தாயிஃஃப் சம்பவம்
- பகுதி 4: கிறிஸ்தவ ஊழியரான அத்தாஸின் வரலாறு
- பகுதி 5: மலக்குல் ஜிபாலுடன் நடந்த உரையாடல்

## பகுதி 1: நபி (ஸல்) அவர்களுக்கு அபூலஹப் பாதுகாப்பு அளித்தது

- அபுதாலிபின் மரணத்திற்குப் பின், நபி (ஸல்) அவர்களுக்கு அரசியல் ரீதியாக மிகவும் நெருக்கடியான நேரமாக மாறியது.

- பனுஹாஷிம் கோத்திரத்தின் தலைவராக இருந்த அபுதாலிப், குரைஷிகளின் தீய திட்டங்களிலிருந்து நபி (ஸல்) அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வந்தார்.

- அவரது மரணத்திற்குப் பிறகு, நபி (ஸல்) அவர்கள் மீதான ஏளனமும், துன்புறுத்தலும் மேலும் கடுமையானதாக மாறியது.

- அபுதாலிபிற்குப் பிறகு, அபூலஹப் பனுஹாஷிமின் தலைவரானார்.

- ஒரு சம்பவத்தில், பனுஹாஷிமுக்கு வெளியே உள்ள ஒருவர் நபி (ஸல்) அவர்களை சபித்ததாகக் கூறப்படுகிறது. இதைக் கேட்டதும், அபூலஹப் வருத்தமடைந்து ஏதாவது செய்ய வேண்டும் என்று முடிவு செய்கிறார்.

- அவர் நபி (ஸல்) அவர்களை அழைத்து, ‘‘ஓ முஹம்மதே! அபுதாலிபின் காலத்தில் நீங்கள் செய்தது போல் செய்து கொள்ளுங்கள். நான் உயிருடன் இருக்கும் வரை, நீங்களும் அப்படியே வாழ்ந்து கொள்ளலாம்’’ என்று கூறுகிறார்.

- நபி (ஸல்) அவர்களுக்குக் கடுமையான எதிரியாக இருந்த அபூலஹபிடமிருந்து வந்த இந்த வார்த்தைகள் மிகவும் விசித்திரமாக இருந்தது.

- ஆனால் அவர் கூறியது நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பினால் அல்ல; மாறாக, கோத்திரத்தின் தலைவராக இருப்பதாலும், அதிகாரத்தைக் காட்டுவதாலும் வந்தது.

- முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அபூலஹப் பாதுகாப்பு அளித்துள்ளார் என்பதைக் கேள்விப்பட்டதும், அபூலஹப் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதாக வதந்திகள் பரவின. குரைஷியர்கள் இது குறித்து அபூலஹபிடம் கேட்டனர், அவர், ‘‘இல்லை, ஆனால் நான் என் கோத்திரத்தாரை பாதுகாக்கிறேன்’’ என்று பதிலளித்தார்.

- அபூஜஹ்லும், உத்பாவும் அபூலஹபின் மனதை மாற்ற ஒரு சதித்திட்டம் தீட்டுகிறார்கள்.

- அவர்கள் அபூலஹப்பிடம் வந்து, ‘‘உங்கள் தந்தை அப்துல் முத்தலிப்பின் முடிவைப் பற்றி உங்கள் சகோதரர் மகனிடம் ஏன் கேட்கக்கூடாது?’’ என்று கூறுகிறார்கள்.

- நபி (ஸல்) அவர்களிடம் சென்று அபூலஹப் அவ்வாறே கேட்கிறார். இதற்கு நபி (ஸல்) அவர்கள், ‘‘அவர் தனது மக்களுடன் இருக்கிறார்’’ என்று பதிலளிக்கிறார்கள்.

- அபூலஹப் அந்தப் பதிலில் திருப்தி அடைந்து, அபூஜஹ்லிடம் திரும்பிச் சென்று நபி (ஸல்) அவர்களின் பதிலைச் சொல்கிறார்.

- அதற்கு அபூஜஹ்ல், ‘‘முட்டாளே! அவரைப் பொறுத்தவரை, அவரது மக்கள் நரக நெருப்பில் உள்ளனர்’’ என்று கூறுகிறார்.

- அபூலஹப், தனது தந்தை நரக நெருப்பில் இருப்பதாகக் கூறும் ஒருவரை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்று நினைத்து மிகவும் கோபமடைந்தார்.

- எனவே அவர் நபி (ஸல்) அவர்கள் மீதான பாதுகாப்பை விலக்கிக் கொள்கிறார்.

- அபூலஹபின் பாதுகாப்பு ஒரு வாரம் முதல் அதிகபட்சம் ஒரு மாதம் வரை இருந்திருக்கலாம்.

- மக்காவின் எந்தத் தலைவர்களிடமிருந்தும் எந்தப் பாதுகாப்பும் இல்லாததால், நமது கண்மணி நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை கிட்டத்தட்ட அங்கு சாத்தியமற்றதாகிவிட்டது. அதனால் அவர்கள் மக்கா நகரத்தை விட்டு வெளியேற வேண்டும் என நினைக்கத் தொடங்கினார்கள்.

- அவர்களுக்கு முதலில் தோன்றியது தாயிஃப் நகரம்.

## பகுதி 2: நபி (ஸல்) தாயிஃப்பை அடைந்து, தலைவர்களை இஸ்லாத்திற்கு அழைத்தது

- தாயிஃப் என்பது மக்காவிற்கு அருகில் இருந்த பிரபலமான ஒரு பெரிய நகரம்.






- மேலும், தாயிஃப் மக்களும், மக்காவின் மக்களும் ஒருவரையொருவர் மிக நன்கு அறிந்திருந்தனர்; அவர்களுக்கிடையில் குடும்ப உறவுகளும் இருந்தன.

- எனவே நபி (ஸல்) அவர்கள், தாயிஃப் நகரில் இஸ்லாத்தை நிலைநாட்டும் இரகசிய முயற்சியாக ஜைது இப்னு ஹாரிதாவுடன் (அடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட தனது வளர்ப்பு மகன்) மக்காவிலிருந்து கால்நடையாகச் சென்றார்கள்.

- தாயிஃப் சம்பவம் நன்கு அறிமுகமான ஒன்றாகும். ஒரு அறிவிப்பில், ஆயிஷா (ரலி) அவர்கள் ஒருமுறை நபி (ஸல்) அவர்களிடம், ‘‘அல்லாஹ்வின் தூதரே! உஹதுப் போரின் நாளை விட உங்களுக்கு மிகவும் கடினமான நாள் ஏதேனும் உண்டா?’’ என்று கேட்டார்கள்.

- உடனே நபி (ஸல்) அவர்கள், ‘‘ஆம்! உங்கள் மக்கள் என்னை மிகவும்

காயப்படுத்தியுள்ளனர். மேலும் மிக மோசமானது அகபா நாள்தான் (அவர்கள் மீது தாயிஃப் சம்பவத்தின் போது கல்லெறியப்பட்ட தினம்)

- மக்காவின் கோத்திரம் குரைஷி என்று அழைக்கப்பட்டது போலவே, தாயிஃப் கோத்திரம் தாகிஃப் என்று அழைக்கப்பட்டது.

- நபி (ஸல்) அவர்களின் காலத்தில், தாகிஃப் கோத்திரத்தின் தலைவர்களாக மூன்று சகோதரர்கள் இருந்தனர்.

- நபி (ஸல்) தாயிஃப் நகரை அடைந்து, தாகிஃப் கோத்திரத்தை ஆட்சி செய்த மூன்று தலைவர்களையும் சந்தித்தார்கள்.

- அவர்களிடம் இஸ்லாத்தின் செய்தியை கூறி, அழைப்பு விடுத்தார்கள்.

- ஆனால் அவர்கள் மூவரும் அதை நிராகரித்து, நபி (ஸல்) அவர்களை மிகவும் ஏளனமாக கேலி செய்தனர்.

- அவர்களில் ஒருவன், ''அல்லாஹ் உங்களை ஒரு நபியாக அனுப்பியிருந்தால், நான் கஃபாவின் திரைச்சீலைகளை கிழித்து எறியலாம்'' என்றான்.

- இரண்டாவது நபர், ''அல்லாஹ்வுக்கு உங்களை விட சிறந்தவர்கள் கிடைக்கவில்லையா?'' என்றான்.

- மூன்றாவது நபர், ''நான் உங்களிடம் பேச முடியாது. ஏனென்றால் நீங்கள் உண்மையிலேயே நபியாக இருந்தால், எனக்கு நீங்கள் மிகவும் பரிசுத்தமானவர். நீங்கள் ஒரு பொய்யராக இருந்தால், நான் உங்களுக்கு பதிலளிக்க முடியாத அளவுக்கு நீங்கள் என் கண்ணியத்திற்குக் கீழே இருக்கிறீர்கள்'' என்றான்.

- அவமானங்களையும், கேலிகளையும் சந்தித்த நபி (ஸல்) அவர்கள் கண்ணியமாகவே இருந்தார்கள். அவர்களை விட்டு வெளியேறும்போது, ''சரி. நீங்கள் என் செய்தியை நிராகரித்தாலும், குறைந்தபட்சம் குரைஷிகளுக்கு நான் இங்கு வந்தது பற்றிச் சொல்லாதீர்கள்'' என்று அவர்களிடம் கூறினார்கள்.

- சில அறிவிப்புகள் அவர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதாகக் கூறுகின்றன.

## பகுதி 3: தாயிஃப் சம்பவம்

- நபி (ஸல்) அவர்கள் தாயிஃபில் சுமார் ஒரு வாரம் முதல் 10 நாட்கள் வரை தங்கி இருந்தார்கள். அந்நாட்களில் கடைவீதிகளுக்கு வரும் மக்களிடம் பிரச்சாரம் செய்தார்கள்.

- ஆரம்பத்தில், யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை; ஆனால் ஒருசில நாட்கள் கழித்து சில மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று தோன்றியது.

- தாயிஃபின் தலைவர்கள் மக்கள் இஸ்லாத்திற்கு வரத் தொடங்குவதைக் கண்டு பீதியடைந்தனர்.

- எனவே அவர்கள் ஒரு கயவர்கள் கும்பலைக் கூட்டி, நபி (ஸல்) மீது கல்லெறிந்து நகரத்திற்கு வெளியே அனுப்புமாறு சொன்னார்கள்.

- ஒரு நாள் பகலில் அந்த கயவர்கள் கும்பல் நபி (ஸல்) அவர்கள் மீது கற்களை எறிந்தனர். அவர்கள் தாயிஃபில் இருந்து நபி (ஸல்) அவர்களைத் துரத்தினர். நபி (ஸல்) அவர்களின் கால்களில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அவர்களது செருப்புகள் இரத்தத்தில் நனையும் அளவுக்கு வந்தது.



- இந்த நிகழ்வில் நபி (ஸல்) அவர்களுடன் சென்ற ஜைது, நபி (ஸல்) அவர்களைப் பாதுகாக்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தார். ஆனால் அவருக்கே தலை முதல் கால் வரை காயம் ஏற்பட்டது. அதனால்

அவரால் கயவர்கள் கும்பலை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியவில்லை.

- அந்தக் கும்பல் இரண்டு முதல் மூன்று மைல்கள் வரை அவர்களைப் பின்தொடர்ந்து விரட்டியது. இதனால் அவர்கள் தாயிஃப்பை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. இந்த நிகழ்வினால் நபி (ஸல்) அவர்கள் அதிர்ச்சியடைந்த நிலையில் இருந்தார்கள். அவர்கள் மேலும் நடந்து சென்று கர்ன்அல் மனாஸில் என்ற இடத்தை அடைந்தார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் அங்கு ஒரு சுவருக்கு அருகில் தஞ்சம் புகுந்தார்கள். அந்தச் சுவர் மக்காவின் குரைஷிகளில் ஒருவருக்குச் சொந்தமானது.

- நபி (ஸல்) அவர்கள் அங்கேயே அமர்ந்து அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தார்கள். அவர்கள் காயமடைந்து சோர்வடைந்த நிலையில், மனமுருகி செய்த துஆ உணர்ச்சிப் பூர்வமானதாக இருந்தது.

- ‘‘யா அல்லாஹ்! உன்னிடம் மட்டுமே நான் என் பலவீனத்தையும், மனிதர்களுக்கு முன்பாக என் உதவியற்ற தன்மையையும், சக்தியின்மையையும் பற்றி முறையிடுகிறேன். நீ கருணையாளர்களுக்கு எல்லாம் மிகவும் கருணையுள்ளவன். நீ உதவியற்றவர்களுக்கும், பலவீனர்களுக்கும் இறைவன்; நீயே என் இறைவன்.

- யாருடைய கைகளில் என்னை விட்டுவிடப்போகிறாய்? என்னைக் கடுமையாக நடத்தும் இந்த அந்நியர்களின் கைகளிலா (தாயிஃப் மக்கள்)? அல்லது நீ கொடுத்த அதிகாரத்தால் என்னை ஒடுக்கும் என் நெருங்கிய உறவினரிடமா (அபூலஹாப்)?

- நீ என் மீது கோபப்படாத வரை, எனக்கு கவலையில்லை. உன் பாதுகாப்பும், ஆறுதலும் எனக்கு மிகவும் தேவையானது என்பதைத் தவிர.

- யா அல்லாஹ்! பூமியின் அனைத்து விவகாரங்களும் சரியாக வழிநடத்தப்படுவதற்கு உன்னுடைய முகத்தின் ஒளியில் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். உன்னுடைய கோபம் என் மீது இறங்குவதையோ அல்லது உன்னுடைய கோபம் என்னைச் சூழ்ந்து கொள்வதையோ விட்டு நான் பாதுகாப்புத் தேடுகிறேன்.

- உன்னிடத்தில் இருப்பதைத் தவிர வேறு எந்த சக்தியும், மாற்றமும் இல்லை’’.

## பகுதி 4: கிறிஸ்தவ ஊழியரான அத்தாஸின் வரலாறு

- நபி (ஸல்) அவர்கள் துஆ செய்து கொண்டிருந்தபோது, அவர்கள் தங்கியிருந்த சுவர் அவர்களது தூரத்து உறவினரான ரபியாஹ் மற்றும் அவரது இரண்டு மகன்களுக்கு சொந்தமானது என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

- நபி (ஸல்) அவர்கள் மீது கயவர்கள் கற்களை எறிந்தபோது அதை அவர்கள் கண்டிருந்தனர். நபி (ஸல்) தங்களது உறவினர் என்பதால் அவர்கள் மீது இரக்கப்பட்டனர்.

- எனவே அவர்கள் தங்கள் கிறிஸ்தவ ஊழியரான அத்தாஸை, நபி (ஸல்) அவர்களுக்கு திராட்சை நிறைந்த தட்டு ஒன்றை பரிசாக அனுப்பினர்.



- நபி (ஸல்) அவர்கள் பழங்களை ஏற்றுக்கொண்டு சாப்பிடத் தொடங்குவதற்கு முன் ‘‘அல்லாஹ்வின் பெயரால்’’ என்று கூறினார்கள்.

- இதைக்கேட்ட, அத்தாஸ் என்ற அந்த ஊழியர், ‘‘இவை இந்த நாட்டு மக்கள் பயன்படுத்தும் வார்த்தைகள் அல்ல. நீங்கள் எங்கிருந்து இந்த வார்த்தைகளைப் பெற்றீர்கள்?’’ என்று கேட்டார்.

- அதற்கு நபி (ஸல்) அவர்கள், ‘‘இது என் இறைவன் எனக்குக் கற்றுக் கொடுத்த ஒன்று. நீர் எங்கிருந்து வந்திருக்கிறீர்?’’ என்று அத்தாஸிடம் கேட்டார்கள்.

- அத்தாஸ் தான் (ஈராக்கில் உள்ள நினிவே) நகரத்தைச் சேர்ந்தவர் என்று கூறியதும், நபி (ஸல்) அவர்கள், ‘‘மத்தா (மத்தேயு)வின் மகன் யூனுஸ் நகரத்தைச் சேர்ந்தவரா?’’ என்றார்கள்.

- அத்தாஸ் அதிர்ச்சியடைந்து, யூனுஸ் மற்றும் மத்தேயுவைப் பற்றி இந்த

நாட்டில் யாருக்கும் தெரியாதபோது, நபி (ஸல்) அவர்களுக்கு எப்படித் தெரிந்தது என்று கேட்டார். நபி வம்சாவளியைப் பற்றி எந்த அறிவும் இல்லாத பிறமதத்தினர் வாழும் அந்த நகரத்தில், அத்தாஸ் மட்டுமே ஒரு கிறிஸ்தவராக இருந்தார்.

- நபி (ஸல்) அவர்கள், ‘‘யூனுஸை நான் எப்படி தெரியாமல் இருக்க முடியும்? அவர் என் சகோதரர்; நாங்கள் இருவரும் அல்லாஹ்வின் நபிமார்கள்’’ என்று கூறினார்கள்.

- இந்த மனிதர் ஒரு நபியாக மட்டுமே இருக்க முடியும் என்பதை அத்தாஸ் உடனடியாக உணர்ந்துகொண்டு, அக்கால கிறிஸ்தவர்களிடையே இருந்த முறைப்படி நபி (ஸல்) அவர்களின் பாதங்களை முத்தமிட்டார்.

- அவர் அப்போதே இஸ்லாத்திற்கும் மாறினார்.

- பின்னர் அத்தாஸ் தனது எஜமானரிடம் திரும்பியபோது, அத்தாஸ் ஏன் அந்த மனிதரின் பாதங்களை முத்தமிட்டார் என்று அவரிடம் கேட்டார்கள். அவர், ‘‘ஓ என் எஜமானரே! பூமியில் அவரை விட சிறந்தவர் யாரும் இல்லை. ஏனென்றால், ஒரு நபி மட்டுமே அறிந்த விஷயங்களை அவர் என்னிடம் கூறினார்’’ என்று பதிலளித்தார்.

- ஆனால் அந்த எஜமானர்கள் அத்தாஸிடம், ‘‘ஓ அத்தாஸ்! அவர் உன்னை சூனியம் செய்து, உன் மதத்திலிருந்து மயக்கிவிட்டார்! உன் மதம் அவருடையதை விடச் சிறந்தது’’ என்று கூறினர்.

- பின்னாட்களில் நடந்த பத்ர் போரின் போது, அவரது எஜமானரின் இரண்டு மகன்கள் அத்தாஸை தங்களுடன் சேர்ந்து சண்டையிட கட்டாயப்படுத்தியதாக கூறப்படுகிறது.

- ‘‘மரங்களுக்கு அடியில் அமர்ந்திருந்த அந்த மனிதருடன் நான் சண்டையிட வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்! அல்லாஹ்வின் மீது ஆணையாக, மலைகள் கூட அவருக்கு தீங்கு செய்ய முடியாது’’ என்று கூறி, அத்தாஸ் சேர மறுத்துவிட்டார்.

- பத்ர் போரில் அவரது எஜமானர்கள் கொல்லப்பட்டனர்.

## பகுதி 5: மலக்குல் ஜிபாலுடன் நடந்த உரையாடல்

- தாயிஃபிலிருந்து திரும்பியபோது, நபி (ஸல்) அவர்கள் கர்ன்அல் மனாஸில் என்ற இடத்தில் இருந்தார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் மேலே பார்த்தபோது, ஒரு மேகம் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததைக் கண்டதாக ஸஹீஹுல் புகாரீயில் உள்ள ஒரு ஹதீஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இந்த மேகத்தில் ஜிப்ரீல் (அலை) இருந்தார்கள். அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம், ''ஓ முஹம்மதே!, மக்கள் உங்களிடம் சொன்னதையும், அவர்கள் உங்களை நிராகரித்ததையும் அல்லாஹ் கேட்டுக்கொண்டுதான் இருந்தான். மேலும், அவன் என்னுடன் மலக்குல் ஜிபாலை (மலைகளின் மலக்கு) அனுப்பியுள்ளான்'' என்று கூறினார்கள்.

- நபி (ஸல்) அந்த மலக்கிற்கு ஸலாம் கூறிய பின்னர், ''நான் மலக்குல் ஜிபால். உங்களுக்கு சாந்தி உண்டாகட்டும்'' என்று கூறும் குரலைக் கேட்டார்கள்.

- ''ஓ முஹம்மதே (ஸல்)! நீங்கள் விரும்புவதைச் சொல்லுங்கள், நான் உங்கள் கட்டளையை செய்ய காத்திருக்கிறேன். நீங்கள் விரும்பினால், இந்த நகரத்தை (தாயிஃப்) இரண்டு மலைகளுக்கு இடையில் நான் சுருக்க முடியும்''.

- நபி (ஸல்) அவர்கள், ''இல்லை! மாறாக அல்லாஹ்வை மட்டுமே வணங்குபவர்களை அல்லாஹ் அவர்களின் சந்ததியினரிடமிருந்து உருவாக்குவான் என்று நான் நம்புகிறேன்'' என்று கூறினார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் மீண்டும் ஒருமுறை, ''முழு உலகத்திற்கும் கருணையாக அதாவது, ''உங்களை முழு உலகத்திற்கும் கருணையாகவே தவிர வேறு எதற்கும் நாங்கள் அனுப்பவில்லை'' (ஸூரா அல்அன்பியா, 21:107) என்ற புகழ்பெற்ற பட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

- இந்த நிகழ்விற்குப்பின் பத்து ஆண்டுகளுக்குள், தாயிஃப் நகரம் கைப்பற்றப்பட்டது. மேலும், மலைகளின் மலக்கு அழிக்க முன்வந்த நேரத்தில் உயிருடன் வாழ்ந்த பலர் உட்பட, அதன் பெரும்பாலான மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர்.



- நபி (ஸல்) அவர்கள் மீது கொடூரமாக கல்லெறியப்பட்ட இடத்தில், இன்று மக்கள் தொழுது வரும் ஒரு பள்ளிவாசல் உள்ளது.

- மேலும் இஸ்லாத்திற்கு சிறந்த சேவையைச் செய்த ஏராளமான இஸ்லாமிய அறிஞர்களை தாயிஃப் உருவாக்கியுள்ளது.